

கர்நாடக மாநில கழகம் சார்பில் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் பங்கேற்று நல உதவிகள் வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு மாநில கழக பொறுப்பாளர் மொ. பெரியசாமி தலைமை வகித்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நா. இராமசாமி, கே. தட்சிணாமூர்த்தி, ஏ.டி. ஆனந்தராஜ், ஆர். அன்பழகன், கே. கருணாநிதி, சற்குணம், முருகுமணி, போர் முரசு கதிரவன், டி. சிவமலை, செ. தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட கிழக்கு(தெற்கு) ஒன்றியத்துக்குட்பட்ட கார்சேரி, சக்குடி, சக்கிமங்கலம் உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் கிராமம் கிராமமாக சென்று பொதுமக்களை சந்தித்த அவர்கள் குறைகளை கேட்டறிந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஊராட்சி நிதியின் கீழ் ரூபாய் 7லட்சம் மதிப்பீட்டில் கார்சேரி ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்ட பயணிகள் நிழற்குடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் மேலூர் ஆர்டிஓ சங்கீதா, மாவட்ட ஊராட்சி செயலாளர் விசாலாட்சி, தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி, ஒன்றிய செயலாளர் ஹக்கீம், பகுதி செயலாளர் சசிகுமார், நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் வினோத், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சீமான், நாகலட்சுமி, இளவரசன், பொன்னுச்சாமி, ஒன்றிய நிர்வாகிகள் பாண்டியராஜ், முருகன், தாஜுதீன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

### முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஏற்பாடு! காரைக்குடியில்

# கலைஞர் தமிழ்ச்சங்கம் சார்பில் 234 தமிழாசிரியர்களுக்கு கலைஞர் விருது!

## அமைச்சர்கள் கே.ஆர்.பெரிய கருப்பன் - தங்கம் தென்னரசு பங்கேற்பு!

சிவகங்கை. டிச.29-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவனை நிறுவனராக கொண்டு கலைஞர் தமிழ்ச் சங்கம் கடந்த 29 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.

இந்த தமிழ்ச்சங்கம் கவின் தமிழ் பாடி கன்னித் தமிழ் வளர்ப்போம் என்ற அடிப்படையில் பல்வேறு தமிழ் நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது . அதன் தொடர்ச்சியாக காரைக்குடி தொகுதிக்குட்பட்ட 234 தமிழாசிரியர்களுக்கு கலைஞரின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கலைஞர் விருது வழங்கும் விழா அபூர்வா மகாலில் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் தலைமையில் கலைஞர் தமிழ்ச் சங்க நிறுவனர் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன், தொழிலதிபர் படிக்காசு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கலைஞர் தமிழ்ச்சங்க செயலாளர் பொறியாளர்தி. செந்தில் குமார் வரவேற்றுப்பேசினார்.

கழக செய்தி தொடர்பு குழு மாநில துணைத்தலைவர் மருது அழகுராஜ் துவக்க உரையாற்றினார் .

இந்த நிகழ்ச்சியில் எஸ்.. மாங்குடி எம்.எல்.ஏ . மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில் குமார், முன்னாள்எம். எல்.ஏ. சுப. துரைராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த கூட்டுறவு துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பேசியதாவது. தமிழ் ஆர்வலர்களை தமிழ் புலவர்களை கலைஞர் தமிழ்ச் சங்கம் சார்பில் பாராட்டு விழா நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். முதலாவதாக சிவகங்கையில் தமிழ் ஆசிரியர்களுக்கு கலைஞர் விருது வழங்கும் விழா நடைபெற்றது.

அதனை தொடர்ந்து தற்போது காரைக்குடியில் கலைஞர் தமிழ். சங்கம் சார்பில் நடைபெற்று வருகின்றது.

மேலும் இந்த மாவட்டத்தில் உள்ள மானாமதுரை , திருப்பத்தூர், சட்டமன்ற தொகுதியிலும் விரைவில் நடத்தப்படும். இந்தியாவிலேயே மொழிக்காக உயிர் நீத்தவரலாறு தமிழகத்திற்கு உண்டு. அத்தகைய வரலாற்றில் தமிழர்கள் இடம் பெற்றுள்ளார்கள் . கலைஞர் தமிழ்ச்சங்கம் தமிழ் மொழியை பரப்புவதில் சிறப்பான பணியை செய்து வருகிறது. இந்த பணி என்பது சாதாரண பணியல்ல .

மிகவும் சிரமமான பணியாகும். ஆசிரியர் பணி என்பது பாராட்டுக்குரிய பணியாகும் .முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் எதை செய்தாலும் சிறப்புடன் செய்து முடிப்பவர்.

அத்தகைய வழியில் இந்த கலைஞர் விருது வழங்கும் விழாவினை சிறப்பாக தனித்தன்மையுடன் நடத்தி உள்ளார். தமிழகம் இந்தியாவிலேயே தனித்தன்மை வாய்ந்த மாநிலமாக செயல்பட்டு வருகிறது .இத்தகைய தனித்தன்மை மாநிலமாக திகழ்வதற்கு பல்வேறு மொழிப்போர் தியாகிகள் செய்த தியாகம்தான் காரணமாகும். தமிழ் மொழி சிறப்பாக வளர வேண்டும் . பேரறிஞர் அண்ணா ,தலைவர் கலைஞர்ஆகியோர் இல்லை என்றால் தமிழ் மொழி நாளடைவில் காணாமல் போயிருக்கும். பேரறிஞர் அண்ணாவும் தலைவர் கலைஞரும் தமிழ் மொழிக்காக,தமிழ் இனத்திற்காக ,தமிழ்மொழி வளர்ச்சிக்காக தன் உயிரை துச்சமாக மதித்து செயல்பட்டார்கள் .அவர்கள் வழியில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களும் கிஞ்சிற்றும் குறையாமல் செயல்பட்டு வருகிறார்.

50 ஆண்டுகாலம் கலைஞர் அரசியல் மற்றும் ஆட்சிப்பணியினை சிறப்பாக நடத்தி வந்தார் .அவர்களது வழியில் தமிழக முதல்வர் அவர்கள் சிறப்பான ஆட்சி நடத்திவருகிறார். தமிழ் மொழி நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் கொண்ட மொழியாகும். இந்த விழாவினை உரிய நேரத்தில் நடத்திய கலைஞர் தமிழ்ச்சங்கத்திற்கும், மு.தென்னவன் மற்றும் நிர்வாகிகளுக்கும் நன்றியையும் பாராட்டுதலினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் சிறப்பு ரை ஆற்றினார்.

விழாவில் 234 தமிழ் ஆசிரியர்களுக்கு கலைஞர் விருது வழங்கி நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியதாவது .

நான் இந்த மேடைக்கு அமைச்சராக வந்து நிற்கவில்லை .ஒரு ஆசிரியரின் மகனாக வந்து நிற்கிறேன் . தமிழாசிரியர் கள் மீது எனக்கு எப்பொழுதும் தனியான மரியாதை உண்டு .அவர்களை பாராட்டுவதற்கான வாய்ப்பு கிடைத்ததை மிகவும் மகிழ்ச்சியுடன் கருதுகிறேன். கலைஞர் தமிழ் சங்கத்தின் சார்பில் 234 தமிழாசிரியர் களுக்கு கலைஞர் விருது வழங்குவது மிகவும் பாராட்டுக்குரியதாகும் .தொகுதி சீரமைப்பினால் பல்வேறு மாநிலங்களில் சட்டமன்ற ,உறுப்பினர் பாராளுமன்ற எண்ணிக்கை குறைக்கப்பட்டது.

ஆனால் தமிழகத்தில் அத்தகைய குறைவான தொகுதிகள் ஏற்பட கூடாது என்பதில் கழகம் தொடர்ந்து போராடி வருகின்றது. இதற்காக தளபதி அவர்கள் இன்று வரை போராடி வருகிறார் .நமக்கு உரிய பிரதிநிதித்துவம் இருந்தால் தான் நமது மொழியை வளர்க்க முடியும். பாதுகாக்க முடியும். நான் அமைச்சராக பணியாற்றுவதால் பல்வேறு சங்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி உள்ளேன்.ஆனால் இந்த தமிழ் சங்கத்தில் பேசுவது என்பது முற்றிலும் வேறுபாடானதாகும் . தமிழ் மொழியை வளர்க்கும் வகையில் தமிழை பரப்பும் வகையில் கலைஞர் தமிழ்ச்சங்கம் சிறப்பாக இந்த ப் பணியினை செய்து வருகிறது.

தமிழ் மொழிக்காக வாழ்ந்து தமிழுக்காகவே உயிர் நீத்தவர் கலைஞர். அத்தகைய தமிழ் மொழியை செம்மொழியாக அறிவிக்க கலைஞர் பல்வேறு வகையான போராட்டங்களை நடத்தினார். அதில் வெற்றி பெற்று தமிழ் மொழியை செம்மொழி ஆக்கினார். தலைவர் கலைஞர் பெயரில் விருது வழங்குவதற்கு இந்த சான்று ஒன்று போதும். இதற்காக கலைஞர் பேரில் விருது வழங்குவது மிகவும் சால பொருத்தமாகும். தமிழுக்கு பல்வேறு சிறப்பு செய்தவர் தலைவர் கலைஞர். பரிதிமாற் கலைஞர் சூரியநாராயண சாஸ்திரி அவர்கள் எண்ணத்தை நிறைவேற்றி தமிழ் மொழியை செம்மொழியாக்கியவர்.தலைவர் கலைஞர் வெல்லப் பிள்ளையார். வெல்ல ப் பிள்ளையார் எல்லோருக்கும் மிகவும் பிடிக்கும். என்று சொன்னால் மிகவும் நன்றாக இருக்கும்.தமிழ் மொழி எப்பொழுதும் சுவையுடன் தான் இருக்கும். அதுபோல் கலைஞரை எல்லோருக்கும் பிடிக்கும் . தமிழ் மொழி இருக்கும் வரை கலைஞர் நினைவு என்றும் இருக்கும். தமிழ் மொழிக்கு சிறப்பு சேர்ப்பது இந்த செட்டிநாடு சீமையாகவும் இங்குதான் பல்வேறு தமிழ் ஆர்வலர்கள் தோன்றினார்கள் . கவிஞர் கண்ணதாசன் தோன்றினார் .ராஜா சர். அண்ணாமலை செட்டியார் வீதீ வீதியாக சென்று தமிழை வளர்க்க பாடுபட்டார். அத்தகைய ராஜா அண்ணாமலை வீட்டிற்கு பேறறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக வந்ததும் விருந்து சாப்பிட சென்றார். .அப்பொழுது ஒரு சிலபேர் அண்ணா அவர்கள் எதற்காக ராஜா சர் அண்ணாமலை செட்டியார் வீட்டுக்கு சாப்பிட செல்கிறீர்கள் .பதவி வந்ததும் அண்ணா மாறிவிட்டார் என்று பேசினார்கள் . அதற்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் தமிழ் மொழியை வளர்ப்பதற்காக வீதி வீதி யாக நடந்து சென்றார் . தமிழ் மொழி வளர்ச்சிக்கு பாடுபட்ட அவரை பாராட்டுவதற்காக நான் அங்கு சென்றேன் என்று கூறி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார் .அத்தகைய தமிழை மூச்சாக கருதி பல்வேறு பிரமுகர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்துள்ளார்கள். உயிர் நீத்துள்ளார்கள். இவர்களை எல்லாம் பாராட்டி தமிழ் ஆசிரியர்களுக்கு கலைஞர் விருது வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.இந்த வாய்ப்பினை நல்கிய காரைக்குடி கலைஞர் தமிழ் சங்கத்திற்கும் , முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் மற்றும் நிர்வாகிகளுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார் .

முடிவில் காரைக்குடி மாநகர செயலாளர் நா. குணசேகரன் நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கை மாறன், முன்னாள் எம். எல்.ஏ சுப மதியரசன்,பொதுக்குழு உறுப்பினர் கள் பள்ளத்தூர் கே .எஸ். ரவி திருமதி ஆதி.கண்ணாத்தாள், நகர் கழக செயலாளர்கள் பெரி. பாலா, க.பொன்னுச்சாமி, ஒன்றிய செயலாளர்கள் சுப. சின்னத்துரை, நாகனி ரவி. கே.எஸ்.ஆனந்த் குன்னக்குடி சுப்ரமணியன், திருமலை முத்துராமலிங்கம் , நா.நெடுஞ்செழியன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய் மாவட்ட இலக்கிய அணிதலைவர் புலிக்குத்தி சீனிவாசன், அயலக அணி சன் சீமான் சுப்பையா, மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான்,ஒன்றிய, நகர் கழக நிர்வாகிகள் சன். சுப்பையா, சொ.கண்ணன், காரை .சுரேஷ்,. நாகராஜன் சித்திக், வட்டப்பிரதிநிதி ரமேஷ், ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.முத்துக்குமார் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி ராதிகா , மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மற்றும் சிவகங்கை நகர் இலக்கிய அணி அமைப்பாளர் முத்துக்கண்ணன், முன்னாள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சீ.இரவி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், விவசாய அணி காளி முத்து, தகவல் தொழில் நுட்ப அணி கண்ணன்,சேவியர். மற்றும் ஏராளமான வர்கள் கலந்து கொண்டார்கள்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தலைமையில்செயலாளர் தி.செந்தில்குமார் மற்றும் கலைஞர் தமிழ்ச்சங்க நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.




விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் வளவனூர், கோவிந்தையர் அரசு நிதியுதவி நடுநிலை பள்ளியில் நடைபெற்று வரும் புதிய வாக்காளர்கள், சேர்த்தல் மற்றும் நீக்குதல் சிறப்பு முகாமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், வளவனூர் பேரூராட்சி மன்றத் தலைவர் மீனாட்சி ஜீவா, வளவனூர் பேரூராட்சி செயலாளர் பா.ஜீவா, தலைமை பொதுக்குழு உறுப்பினர் TNJ.சம்பத், துணை தலைவர் பா.அசோக், ஒன்றிய கழக செயலாளர் P.தெய்வசிகாமணி, கோலியனூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம் மற்றும் பேரூராட்சி நிர்வாகிகள், மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, பேரூர் சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

# பல்லடத்தில் “வெல்லும் தமிழ்ப்பெண்கள்” மேற்கு மண்டல மாநாட்டிற்கு திரண்டு வாரீர்!

## மாவட்டச் செயலாளர் க,செல்வராஜ், பொறுப்பாளர்கள் இல,பத்மநாபன் – கே,ஈஸ்வரசாமி– மேயர் என்,தினேஷ்குமார் வேண்டுகோள்!



திருப்பூர், டிச.29-

திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்ம நாபன், திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி, திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் என்.தினேஷ்குமார் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

1.31 லட்சம் மகளிருக்கு ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’, ‘விடியல் கட்டணமில்லா பேருந்துப் பயணம்’, கல்வி கற்கும் மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண் திட்டம்’, வேலைக்குச் செல்லும் மகளிருக்கு பாதுகாப்பான ‘தோழி விடுதி’, இந்தியாவிலேயே அதிக அளவாக 43 சதவீதம் வேலைக்குப் போகும் பெண்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்வதற்கான சூழல் என மகளிர் மேம்பாட்டுக்காக தொடர்ச்சியான திட்டங்களை வகுத்து வரும் முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை யாற்றிட கழக துணைப் பொதுச் செயலாளர் திருமதி கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில் 29.12.2025 திங்கட்கிழமை இன்று மாலை 4.00 மணி அளவில், திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் மாநாடு நடைபெற உள்ளது.

இம்மாநாட்டில் ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக, வார்டு கழக, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், மாவட்டத் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் அனைவரும் அந்தந்த பகுதியில் உள்ள மகளிரை அதிக அளவில் பங்குபெறச் செய்து மாநாட்டினை வெற்றியிடச் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

### கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! கே.எஸ்.சந்திரன் வரவேற்புரை!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா! இருசக்கர வாகனம் விழிப்புணர்வு பேரணி!

## அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி - எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, டிச.29-

உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு அன்னவாசல் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் தலைகவசம் வழங்கும் விழா மற்றும் இருசக்கர வாகனம் விழிப்புணர்வு பேரணி விழா இன்று 29.12.2025, திங்கட்கிழமை எண்ணை ஊராட்சி மேலப்பட்டியில் மாலை 4.00 மணியளவில் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது.

அன்னவாசல் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.எஸ்.சந்திரன் வரவேற்புரையாற்றுகிறார்

மு.பி.மணி, கே.ஆர். என்.போஸ், தென்னலூர் எம்.பழனியப்பன், ஆர். ஆர்.எஸ்.மாரிமுத்து, எம். கோவிந்தராஜ் மு.பி.ம. சத்தியசீலன் அ.இளங்குமரன் கே.பி.அய்யப்பன் , ஆர். எம்.செந்தில்குமார் டி.செல்வம், எஸ்.ராஜேந்திரன், ஆர்.முத்துச்செல்வம், சித. சண்முகம், எம்.முத்துச்சாமி பழ.பாண்டியன் பி. ராஜேந்திரன் முத்துலெட்சுமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பள்ளி கல்வித்துறை அமைச்சர், திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கணிம வளத்துறை அமைச்சர்,புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் தலைமை கவசம் வழங்கி, இரு சக்கர வாகன பேரணியை துவக்கி வைக்கின்றனர். விராலிமலை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர், துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, தலைமை கழக இளம் பேச்சாளர் சொ.தமிழினியன், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைபித்தன், வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான் மற்றும் த.சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சி சுந்தரம் பி.டி.அரசகுமார், டாக்டர் அண்ணாமலை ரகுபதி, செ. அசோக்பாண்டி யன்,

வி.என்.மணி அரு.வீரமணி, சுப.சரவணன், எம். லியாகத் அலி, எஸ்.எஸ். கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, கீரை. தமிழ்ராஜா, சு.சண்முகம், வே.ராஜேஷ்,

மு.க.ராமகிருஷ்ணன், வெ.முத்துகிருஷ்ணன் எம். பரமசிவம் தவ. பாஞ்சாலன், என்.சேட்டு, சி.சண்முகம், மா.தமிழ் அய்யா, சி..சண்முகம், ஒ.எஸ்.வெங்கடாஜலம், ஆர்.ஆர்.சாமிநாதன், உ.முருகேசன், பி. அண்ணாத்துரை,

என்,சாத்தையா, இராசு. சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, சி.ஆர்.வி.சித்ரா, எம்.எம்.பாலு, முனைவர் செ.குறிஞ்சி வாணன், பூங்குடி எம்.சிவா, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், உஷா ராணி, அ.பிரபா, உரக்கடை எம்.கருப்பையா மஜித் முபாரக் , டி.சூசைராஜ், வி.என்.எம். பாலு. வி.ஜி.ஆர்.மணிவண்ணன், சி.அரங்கநாயகம், ஆர்.டி.ஆர்.ராமசாமி, எம். சுப்பையா, எஸ்.வி.ஆர். ஸ்டாலின் ராஜா, கே.கணபதி கவிவேந்தன், எம். வேலுச்சாமி, இபி சண்முகம், கே.சிவசுப்பிர மணியன், எஸ்.நிஜாமுதீன், டாக்டர் கே.என்.அமானுல்லா, ஏ.சுந்தர்ராஜ், ஆர்.சுப்பையா(எ) ரவி, எம்.வி.முத்தையா, மாங்குடி ஆர்.ஜே.அண்ணாத்துரை, எம்.பி.எஸ்.பாரி, சி.மணி, வழக்கறிஞர் பால முருகன், சிப்காட் சதீஷ்குமார், தங்கமணி, சி.சின்னத்துரை, கைபழனிச்சாமி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொள்ளனார். முடிவில் இலுப்பூர் பேரூர் கழக செயலாளர் வை. விஜயக்குமார், அன்னவாசல் பேரூர் கழக செயலாளர் எம். எஸ்.ஏ.முகம்மது ரிஷா, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ்.ச இளையசூரியன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றியம் அப்பம்பட்டு, கவரை, கடகம் பூண்டி ஆகிய ஊராட்சியில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்தசிறப்பு முகாமை விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ நேரில் ஆய்வு செய்தார்.உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், ஒன்றிய அவைத் தலைவர் ஆறுமுகம், ஒன்றிய துணை செயலாளர் குமார் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.